## கல்வி நிர்வாகியிற்கான தேடல்

## York Region District School Board (யோர்க் பிராந்திய பாடசாலை மன்றம்)

### அறிமுகம்

எங்களை அறிமுகப்படுத்திக்கொள்வதற்கும், York Region District School Board (யோர்க் பிராந்திய பாடசாலை மன்றம்) இற்காக புதியதோர் கல்வி நிர்வாகி (Director of Education) ஒருவரை அடையாளப்படுத்துவதற்கு நாம் மேற்கொண்டுள்ள தேடலைக் குறித்து சில உள்நோக்குகளை வழங்குவதற்கும் ஒருசில தருணங்களை நாம் எடுக்க விரும்புகின்றோம்.

Phelpsgroup ஆனது, பாடசாலை மன்றங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், அரசாங்கங்கள், வைத்தியசாலைகள், அரசு நிறுவனங்கள், ஒழுங்குபடுத்தல் அமையகங்கள், மற்றும் சம்பந்தப்பட்ட தொழில்சார் சங்கங்கள் உள்ளடங்கிய பரவலான பொதுத்துறையில், உயர் அதிகாரி ஆள்தேர்வு மற்றும் திறமை மேலாண்மையில் 30 வருடங்களுக்கும் மேலான அனுபவமுடைய ஒரு கனேடிய நிர்வாகத் தேடல் நிறுவனமாகும். ஒன்ராறியோ முழுவதும் காணப்படும் பல பாடசாலை மன்றங்களில் செயல்தூண்டும் மற்றும் இயக்கவாற்றல் மிகுந்த வேலைவாய்ப்புகளுக்கு அசாதாரணமான முன்னோடிகளை அடையாளப்படுத்தும் சிறப்புரிமையை நாம் கொண்டுள்ளோம்.

Phelpsgroup இலிருந்து Joan Green, Heather Connelly, Jayson Phelps மற்றும் Frank Markel ஆகியோர் York Region District School Board இன் Board of Trustees' Search Committee (தர்மகர்த்தா சங்கத்தின் தேடல் குழுமம்) உடன் சேர்ந்துழைத்து புதிய Director of Education (கல்வி நிர்வாகி) ஒருவரைத் தேர்ந்தெடுக்க உதவிசெய்வதற்காகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். பன்மயமான மக்கள் தொகையியல் மற்றும் தலைமை தாங்குபவர்களுக்கு புதிதாக வளர்ச்சியுறும் பங்குகள் மற்றும் கடமைகள் காணப்படும் இக்காலத்தில், மாணவர்களினதும் குடிமக்களினதும் ஆர்வத்தையும் சமூகநலனையும் பூர்த்திசெய்யக்கூடிய நபர்களை பாடசாலை மன்றங்கள் தேர்ந்தெடுப்பதை உறுதிசெய்வது முக்கியமாகும்; அவர்கள் சரியான தகுதி, கடமையுணர்ச்சி, மற்றும் குணவியல்பைக் கொண்ட, வழிநடத்தக்கூடிய தலைவர்களாக இருக்கவேண்டும். வெளிப்படைத்தன்மையும் பொறுப்புடைமையும் கூடிய இவ்வேளையில், தலைமைதாங்கல் என்பது முன்னெடுத்துக்காட்டாகவும், ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகவும், புத்தமைக்கும் இயல்புடையதாகவும் காணப்படவேண்டும்.

York Region District School Board இனால் எடுக்கப்பட்டுள்ள இம்முயற்சி, மன்ற உறுப்பினர்களுக்கும் மன்றத்துடன் தொடர்புள்ள அனைவருக்குமான தலைமையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை பிரதிபலிக்கின்றது. ஆகவே, இந்த வாய்ப்பு/பதவி உரை (Opportunity/Position Brief) (பணிப்பாணை மற்றும் வேட்பாளர் நேர்முக விவரம்) சம்பந்தமாக முடியுமான அளவிற்கு உங்களில் பலரிடமிருந்து அபிப்பிராயங்களை நாம் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும். நீங்கள் எம்முடன் நேராகப் பேச விரும்பினால், Frank Markel உடன் fmarkel@phelpsgroup.ca என்ற மின்னஞ்சல் முகவரியில் அல்லது 416 364-6229 இணைப்பு 107 என்ற தொலைபேசி இலக்கத்தில் தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள்.

இந்த கருத்தாய்வு முழுவதும், இப்பதவியிற்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் நாம் அடையாளப்படுத்தவேண்டிய, புதிய கல்வி நிர்வாகி ஒருவருக்கு அவசியமான பணிப்பாணை, தலைமைதாங்கல் குணவியல்புகள், இயற்பண்புகள், மற்றும் அனுபவங்கள் என்பவற்றிற்கான ஆலோசனையை நாடுகின்றோம். இக்கருத்தாய்வு அநாமதேயமானது என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள்; அத்துடன் பதிலளிக்கும் ஒவ்வொருவரினது தகவல்களையும் நாம் நம்பகமான முறையில் பாதுகாப்போம்.

## கல்வி நிர்வாகியிற்கான தேடல்

## York Region District School Board (யோர்க் பிராந்திய பாடசாலை மன்றம்)

மாணவர்களின் சாதனையையும் நலனையும் பேணுவதற்கு புதிய கல்வி நிர்வாகி ஒருவரிற்கு உதவக்கூடிய காரணிகளை அடையாளப்படுத்தும் நோக்கத்திலிருந்து பார்க்கும்பொழுது, கீழ்வரும் விடயங்களில் உங்கள் அபிப்பிராயங்களை உங்கள் மன்றத்தின் கல்வி நிர்வாகி தேர்வுக் குழு (Director of Education Selection Committee) புரிந்துகொள்வதற்கு இத்தகவல்கள் உதவும்:

- புதிய கல்வி நிர்வாகியின் பங்கு மற்றும் பணிப்பாண்மை;
- புதிய கல்வி நிர்வாகி கவனத்திற் கொள்ளவேண்டிய முக்கிய வாய்ப்புகள்;
- புதிய கல்வி நிர்வாகியிற்கு வெற்றியெய்த உதவும் மன்றத்தின் ஆற்றல்கள்;
- York Region District School Board இன் குறிக்கோள், நோக்கம், மற்றும் விழுமியங்கள்;
- முதல் 18 மாதங்களில் ஒரு நிர்வாகியின் வேலையில் வெற்றியிற்கான அறிகுறிகள்;
- வெற்றியெய்தும் வேட்பாளர் ஒருவர் கொண்டிருக்கவேண்டிய தலைமைதாங்கற் குணவியல்புகள்.

மறுபடியும், எல்லா தகவல்களும் நம்பகமான முறையில் பாதுகாக்கப்படும். இக்கருத்தாய்வைப் பூர்த்திசெய்த பின்னர் உங்களுக்கு மேலதிகமாக ஏதேனும் எண்ணங்கள் எழுந்தால், மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள தொடர்பிலக்கத்தில் எங்களுடன் நேரடியாகப் பேசுவதற்கு தயங்காதீர்கள்.

செப்ரெம்பர் 17, 2017 அளவில் பெறப்படும் பதில்கள் கல்வி இயக்குநரின் வேலை விவரிப்பு மற்றும் வேட்பாளரின் நேர்முக விவரத்தின் ஆரம்ப விருத்தியிற்கு கருத்திற்கொள்ளப்படும். இத்திகதியிற்கு அப்பாலும் ஒக்ரோபர் 1, 2017 இற்கு முன்னரும் பெறப்படும் பதில்கள் பொறுப்பாட்சியர்கள் அறிந்துகொள்வதற்கு பகிர்ந்துகொள்ளப்படும்.

நன்றி.

Joan Green
Partner
Phelpsgroup

Heather Connelly
Partner
Phelpsgroup

Jayson Phelps
Partner
Phelpsgroup

Frank Markel
Partner
Phelpsgroup

**<u>கல்வி நிர்வாகியிற்கான தேடல்</u>**

**<u>York Region District School Board (யோர்க் பிராந்திய பாடசாலை மன்றம்)</u>**

**<u>வினாக்கள்</u>**

1. York Region District School Board பற்றிய எந்த விடயம் உங்களுக்கு அதிகூடிய பெருமையைத் தருகின்றது? மன்றத்தின் மிக வலிமையான அம்சம் எதுவென்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

2. York Region District School Board எதிர்நோக்கும் மிகப்பெரிய சவால்கள் எவை? இச்சவால்கள் எந்த அளவிற்கு புதியதோர் கல்வி நிர்வாகியிற்கு வாய்ப்புகளை உண்டாக்குகின்றன?

**கல்வி நிர்வாகியிற்கான தேடல்**

**York Region District School Board (யோர்க் பிராந்திய பாடசாலை மன்றம்)**

3. York Region District School Board இன் குறிக்கோள், நோக்கம், விழுமியங்கள், மற்றும் உத்திசார் திட்டத்தை நீங்கள் ஆராயும்போது, எது உங்களுக்கு மிகவும் ஆர்வத்தைத் ஏற்படுத்துகின்றது?

*குறிக்கோள், நோக்கம், மற்றும் விழுமியங்களிற்கு:* *http://www.yrdsb.ca/AboutUs/Pages/Mission-Vision-values.aspx*
*உத்திசார் திட்டத்திற்கு:* *http://www.yrdsb.ca/AboutUs/BoardPlans/Pages/MYP-Goals.aspx*

4. இப்பதவியிற்கு Ontario College of Teachers உடன் நன்னிலையும் Supervisory Officer தகுதியும் அவசியப்படுகின்றது. கல்வி மற்றும் பின்புல அனுபவத்தைப் பொறுத்தவரையில் முக்கியமென்று நீங்கள் கருதுவதை இங்கே சுட்டிக்காட்டுங்கள்.

**கல்வி**

**பின்புல அனுபவம்**

**<u>கல்வி நிர்வாகியிற்கான தேடல்</u>**

**<u>York Region District School Board (யோர்க் பிராந்திய பாடசாலை மன்றம்)</u>**

5. கீழ்வரும் குணவியல்புகள் ஒவ்வொன்றிற்கும் ‘‘நிச்சயமாகக் கொண்டிருக்கவேண்டும்’’, ‘‘கொண்டிருக்கவேண்டும்’’, அல்லது ‘‘கொண்டிருந்தால் நல்லது’’ என்று உங்கள் விருப்பத்தைச் சுட்டிக்காட்டுங்கள்.

| | நிச்சயமாகக் கொண்டிருக்க வேண்டும் | கொண்டிருக்க வேண்டும | கொண்டிருந்தால் நல்லது |
|---|---|---|---|
| உயர் நாணயம் | | | |
| மாணவர்களின் சாதனை மற்றும் நலனைப் பேணுவதற்கு முக்கியத்துவம் அளிப்பவர் | | | |
| நம்பகமானவர் | | | |
| சிறந்த தகவல்தொடர்பாளர் | | | |
| சுறுசுறுப்பானவர் | | | |
| கடமைகளைக் காப்பாற்றுபவர் | | | |
| ஒன்றுசேர்ந்து உழைப்பவர் | | | |
| சமூகத்துடன் தொடர்பை ஏற்படுத்துபவர் | | | |

6. பணியேற்றுக்கொண்ட முதல் 18 மாதங்களில்,York Region District School Board இல் பணியாற்றும் கல்வி நிர்வாகியின் வேலைப்பாடுகள், மாணவர்களின் சாதனையிலும் நலனிலும் நேர்மறையான தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளன என்பதைக் காண்பிக்கும் வெற்றிக் குறிகாட்டிகளில் நீங்கள் காண விரும்புவன எவை?

**கல்வி நிர்வாகியிற்கான தேடல்**

**York Region District School Board (யோர்க் பிராந்திய பாடசாலை மன்றம்)**

7. கல்வி நிர்வாகி ஒருவர், சமூகங்களுடன் நேர்மறையான தொடர்புகளை உருவாக்குகிறார் என்பதைக் காண்பிப்பதற்கு நீங்கள் எவற்றை அவதானிக்கவேண்டும்?

| |
|---|
| |

8. கீழுள்ளவற்றில் எந்த பிரிவில் நீங்கள் அடங்குகின்றீர்கள் என்பதைத் தயவுசெய்துச் சுட்டிக்காட்டுங்கள்:

☐ தர்மகர்த்தா
☐ உயர் நிர்வாகம்/கல்வி நிர்வாகியிற்கு நேரடி அறிக்கையாளர்
☐ அதிபர்
☐ மேலாளர்
☐ ஆசிரியர்
☐ துணை அலுவலர்
☐ மாணவர்
☐ பெற்றார்/பாதுகாவலர்
☐ சமூக ஸ்தாபனம்/ அமைப்பாண்மை
☐ தொழிற்சங்கம்/ சங்கத் தலைமை
☐ மன்ற ஆலோசனைக் குழுக்கள் (SEAC, EIAC, PEAC)
☐ வெளிவாரி பங்காளர்/பங்குதாரர்
☐ York பிராந்தியத்தில் குடியிருப்பவர்
☐ வேறு

## <u>கல்வி நிர்வாகியிற்கான தேடல்</u>

## <u>York Region District School Board (யோர்க் பிராந்திய பாடசாலை மன்றம்)</u>

9. இப்பதவியிற்கு சாத்தியமுள்ள வேட்பாளர்களாக நாங்கள் ஆராயக்கூடிய நபர்கள் யாராவது உள்ளார்களா? ஆம் எனின், அவர்களின் பெயர் மற்றும் தொடர்புத் தகவல்களை (அறிந்திருந்தால்) கீழே குறிப்பிடுங்கள்.

***இவ்வினாக்களுக்கு பதிலளிக்க நேரத்தைச் செலவிட்டதற்கு நன்றி.***

Joan, Heather, Jayson மற்றும் Frank
Phelpsgroup